# Salve Regina



**Society of St. Pius X**, Palayamkottai.
Tel:0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

**ஜூன் & ஜூலை 2007 மலர்: 2 இதழ்: 6**
**(தனிச்சுற்றுக்கு மட்டும்)**

# சேசுவின் திருஇரத்தம் நமது இரட்சண்யத்தின் கிரயம்!

சேசுவில் அன்பார்ந்த விசுவாசிகளே,

**இரட்சண்யம்** அல்லது **இரட்சிக்கப்படுவது** என்பது பாவத்திலிருந்தும், நித்திய கேட்டிலிருந்தும் காப்பாற்றப்பட்டு, என்றென்றைக்கும் சர்வேசுரனின் சந்நிதியிலே இளைப்பாறி, அதுவரைக்கும் கண்கள் கண்டிராத, காதுகள் கேட்டிராத, மனம் அனுபவித்திராத பரவச மோட்ச இன்பத்தை அனுபவிப்பதாகும்.

இந்த இரட்சண்யத்தை நாம் அடைவதற்கு வானத்தின் கீழோ அல்லது மேலோ "சேசு" என்ற நாமத்தைத் தவிர வேறு நாமம் நமக்கு அருளப்படவில்லை. "சேசு" என்ற நாமத்தின் பொருளே நம்மை "இரட்சிக்கிறவர்" என்பது தான்! "அவருக்கு சேசு என்று பெயரிடுவீர். ஏனெனில் அவர் தன்னுடைய ஜனத்தை அவர்களது பாவங்களிலிருந்து மீட்பார்". பாவத்தைத் தவிர வேறு கொடிய தீமை, செயல் கிடையாது. பாவம் ஒரு ஆத்துமத்தை துன்பத்தில் ஆழ்த்தும், இருளடையச் செய்யும், அதனுடைய சமாதானத்தைக் குலைக்கும். இப்படிப்பட்ட பாவத்திலிருந்து, அதன் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்பதற்காகவேதான் சர்வேசுரன் மனிதாவதாரம் எடுத்தார். மனிதாவதாரம் எடுக்காமலேயே இவ்வுலகை சர்வேசுரனால் இரட்சிக்க முடியும். ஆனாலும் அவருடைய அளவில்லாஞானம், நித்தியத்திலிருந்தே இரத்தம் சிந்தாமல் பாவங்களிலிருந்து மன்னிப்பு கிடையாது என்று தீர்மானித்திருந்தது. இத்தீர்மானத்தின்படியே, மெய்யான தேவனும், மெய்யான மனிதனுமானவருமான சேசுகிறீஸ்துநாதர் தமது சொந்த இரத்தத்தை நமக்காகச் சிந்த திருவுளமானார். பாவத்தினால் மூட்டப்பட்ட தேவகோபாக்கினியை தணிக்க வல்லமை பெற்றது சேசுவின் திருஇரத்தம் மட்டுமே. இந்த திவ்விய இரத்தத்தின் பேறுபலன்களைக் குறித்தே "பாதாளத்தில்" அமிழ்ந்து கிடந்த ஆதாமின் மக்களாகிய நம்மைத் தூக்கி எடுத்து பிதாவாகிய சர்வேசுரனுடன் சமாதானமாய் வாழ வழி வகுக்கப்பட்டது.



இப்படி நம்முடைய இரட்சிப்புக்காக தன்னுடைய திருஇரத்தத்தைச் சிந்திய சேசு, அவ்விலைமதிப்பில்லாத ஒரு துளி இரத்தத்தைக் கொண்டேகூட மனுக்குலம் முழுவதையும் இரட்சித்திருக்க முடியும். அவர் பிறந்த 8-ம் நாள் விருத்தசேதனம்பட்டாரே, அப்போது அவர் சிந்திய இரத்தமே போது மானதாக இருக்கும். ஆனாலும், நமதாண்டவர் நம்மேல் கொண்ட சிநேகத்தின் தயவின் பிரதிபலிப்பாக கொடிய பாடுகளின் மூலமாக தன்னுடைய இரத்தம் அனைத்தையுமே சிந்தச் சித்தமானார். தன் உயிர் சரீரத்தை விட்டுப் பிரிந்த பிறகும்கூட அவருடைய திருவிலா குத்தித் திறக்கப்பட்டு கடைசி துளி "இரத்தமும், தண்ணீரும வெளிப்பட்டது" (அரு.19:34).

---

**"நாம் ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறீஸ்துநாதருடைய இரத்தத்தோடு ஐக்கியமல்லவா? நாம் பிட்கும் அப்பமும் ஆண்டவருடைய சரீரத்தோடு பங்கு பற்றுதல் அல்லவா?"**

**(1 கொரி. 10:16)**

**சேசுவின் திருஇரத்தத்தின் வல்லமை !**

நமது இரட்சண்யத்தின் கிரயமாக சிந்தப்பட்ட சேசுவின் திருஇரத்தத்தின் வல்லமையை நாம் அறிந்து கொள்வோம்.

எகிப்து தேசத்தில் அடிமைத்தனத்திலிருந்த யூதர்களை விடுவிப்பதற்காக 10 விதமான ஆக்கினைகளை சர்வேசுரன் அந்நாட்டின் மீது அனுப்பினார். அதிலே இறுதியான ஆக்கினை - எகிப்தியரின் “தலைச்சன் பிள்ளைகள்” கொல்லப்படுவதாகும். எந்தெந்த வீடுகளின் கதவுநிலைகளில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டதோ அவ்வீட்டுக் குழந்தைகள் நீங்கலாக மற்ற அனைவருடைய தலைச்சன் குழந்தைகளும் கடவுளின் சம்மனசானவரால் கொல்லப்பட்டனர். இதுபற்றி அர்ச். கிறிஸ்தோஸ்தோம் அருளப்பர் விளக்கிக் கூறும்போது: “சர்வேசுரனுடைய கோபம் அந்த தேசத்தின் மேல் இருந்தது. மரணத்தின் தூதர் அங்குள்ள வீடுகளை வட்டமிட்டபோது, மோயீசன் இஸ்ராயேல் மக்களிடம் தங்கள் பிள்ளைகளைக் காக்க கூறியது என்ன? ஒரு வயது ஆன ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை வீட்டு வாயிற்கதவில் தெளிக்க வேண்டும் என்று சொன்னார். பகுத்தறிவற்ற ஒரு மிருகத்தின் இரத்தம், பகுத்தறியும் மனிதனைக் காப்பாற்றக் கூடுமோ?! ஆம். மோயீசன் சரியாகத்தான் சொல்லுகிறார்; அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் தன்னிலே அத்தகைய வல்லமையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அது சேசுவின் திருஇரத்தத்தின் முன் அடையாளமாக இருக்கிற படியால்தான் அதற்கு சாத்தியமாயிற்று... இரத்தம் தெளிக்கப்பட்ட கதவுகளை விட்டு மரணத்தின் தூதர் கடந்து சென்றது போல, நம்முடைய ஆத்துமத்தின் எதிரிகள், அதனைத் தாக்க வரும்போது ஆத்துமத்தின் மீது சேசுகிறீஸ்துவின் திருஇரத்தம் பொழியப்பட்டதைக் கண்டு அதைக் கடந்து சென்று விடுகின்றன” என்கிறார்.

அர்ச். சின்னப்பர் எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில் சேசுவின் திருஇரத்தத்தை பழைய ஏற்பாட்டின் இரத்தப் பலிகளுடன் ஒப்பிட்டு “... வெள்ளாட்டுக் கிடாய்கள், காளைகள் இவைகளின் இரத்தமும்... மாம்ச அசுத்தத்தை நீக்கி அவர்களைச் சுத்தப் படுத்துமானால்... கிறீஸ்துநாதருடைய இரத்தம் எவ்வளவோ அதிகமாய் நம்மைச் ... சுத்திகரிக்கும்...” (எபி. 9:13-14) என்று கூறுகிறார்.

இவ்வாறு பழைய ஏற்பாட்டின் இரத்தப்பலி அனைத்துமே புதிய உடன்படிக்கையின் இரத்தமாகிய சேசுவின் திருஇரத்தத்தை முன் குறிப்பவையாகவே உள்ளன. பழைய ஏற்பாட்டில் பலிகளின் இரத்தத்திற்கு சர்வேசுரன் சுத்திகரிப்பு வல்லமையை அருளினாரென்றால் அது, தமது திருக்குமாரனின் திருஇரத்தத்தை முன்னிட்டே!

அன்பார்ந்தவர்களே, ஜூலை மாதமானது சேசுவின் திரு இரத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். இம்மாதத்தில் குறிப்பாக சேசுவின் திருஇரத்தம் நம்முடைய இரட்சண்யத்தின் கிரயம் - விலை என்பதையும், அவருடைய இரத்தத்தினாலன்றி வேறு எதனாலும் நமக்கு இரட்சண்யம் இல்லை என்ற சத்தியத்தையும் தியானித்து, சேசுவின் திருஇரத்த பலன்களை நமது ஆத்துமத்தில் நிறைவாய் பெற்றுக்கொள்வோமாக!

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**

## *“Deo Gratias”*



# சர்வேசுரனுக்கு நன்றி கூறுவோம்!

**அன்பார்ந்த விசுவாசிகளே,**

**நாம் ஆவலோடு எதிர்பார்த்திருந்த பாப்பரசரின் “தன்னிச்சையான ஆணை மடல்” “Motu Proprio” - “Summorum Pontificum” என்ற தலைப்பின் கீழ் பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரால் 7-7-2007 முதல் சனியன்று வெளியிடப்பட்டு விட்டது! சர்வேசுரனுக்கு நன்றி கூறுவோம்!**

**பாரம்பரிய திரிதெந்தீன் லத்தீன் திவ்விய பலிபூசை பங்குகளிலும், துறவறமடங்களிலும், திருத்தலங்களிலும் பகிரங்கமாக நிறைவேற்றலாம் என்றும், அதற்கு பங்கு குருக்களும், மேற்றிராணிமார்களும் விருப்பத்தோடு அனுமதிக்க வேண்டுமென்று பாப்பரசர் தமது ஆணை மடலில் குறிப்பிட்டுள்ளார். இது கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரியத்திற்கான முதல் வெற்றி! ஆனாலும் நாம் கடக்க வேண்டிய, சாதிக்க வேண்டிய, திரும்பப் பெற வேண்டியவைகள் அதிகமுள்ளன. ஆயினும் இருட்டில் வாழ்பவனுக்கு சிறு ஒளியும் ஆறுதல் தருவது போல, நவீனமான இருட்டில் உழன்று வந்த சத்தியத் திருச்சபைக்கு ஒரு நம்பிக்கைத் தரும் ஒளியாக இது இருக்கிறது.**

**இந்த ஒளியைப் பெற்று தந்த நமது பரலோகத் தாய்க்கு நமது நன்றியையும், வணக்கத்தையும் சமர்ப்பிப்போம். ஏனெனில் கடந்த அக்டோபர் மாதத்தில் நாம் ஜெபித்து பாப்பானவரிடம் சமர்ப்பித்த ஜெபமாலைகளடங்கிய பூச்செண்டை தேவதாய் கருணையுடன் ஏற்று, தேவநீதியிடம் ஒப்புக்கொடுத்து, சாத்தானின் மீதான இந்த முதல் வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளார்கள். தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து திருச்சபையைக் காக்க ஜெபதவத்தில் ஈடுபட்டு ஜெபமாலைகளை உருக்கத்துடன் ஜெபித்து மன்றாடுவோமாக!**


**பாளையங்கோட்டை**
**9-7-2007**

**ஆசிரியர்**
Salve Regina

# அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை பொது சிரேஷ்டரின் கடிதம்


அன்புள்ள விசுவாசிகளே,

2007, ஜூலை 7-ம் நாளன்று வெளியிடப்பட்ட "Summorum Pontificum" என்ற பாப்பானவரின் ''தன்னிச்சையான ஆணை மடல்'' (Motu Proprio) பாரம்பரிய திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை அதனுடைய உரிமையுள்ள அந்தஸ்தில் மீண்டும் நிலைநிறுத்தியுள்ளது. பாரம்பரியத் திவ்விய பலிபூசை ஒருபோதும் நீக்கப்படவோ அல்லது தடைசெய்யப்படவோ இல்லை என்பது அம்மடலின் வாசகங்களில் மிக தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் இந்த திவ்விய பலிபூசைக்கு பிரமாணிக்கமாயிருப்பது ஒருபோதும் கீழ்படியாமை அல்ல. ஆனால் ஏறக்குறைய 40 வருடங்களாக அநேக குருக்களும், விசுவாசிகளும் கலாபனைக்குள்ளானார்கள், ஏன் தண்டிக்கவும் பட்டார்கள்! எக்காலத்துக்கும் உரிய இந்த திவ்விய பலிபூசைக்கு உண்மையான கீழ்ப்படிதல் என்ற பெயரால் பிரமாணிக்கமாயிருக்கவும், அனைத்து அதிகார துஷ்பிரயோகங்களை எல்லாம் எதிர்த்து நிற்கவும் நமக்கு கற்பித்த **வந். அதிமேற்றிராணியார் மார்செல் லெஃபவர் ஆண்டகையவர்களுக்கு** இன்று மனப்பூர்வமாக நன்றி செலுத்துவது நீதியாகும். அதோடு, பாரம்பரிய பூசையின் உரிமை நிலைநாட்டப்பட்டதான இச்செயல், கடந்த அக்டோபர் மாதத்தில் தேவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஏராளமான நமது ஜெபமாலைகளின் பலன் - விளைவு என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அதற்காக அத்தாய்க்கு நமது நன்றியறிதலை எப்படி சமர்ப்பிப்பது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.



பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர்

அர்ச். 5-ம் பத்திநாதரின் திவ்விய பலிபூசையை அதனுடைய உரிமையான, மேலான அந்தஸ்தில் மறுபடியும் நிலைநிறுத்துவதற்கும் அப்பால் இந்த 'Motu Proprio' ஆணை மடலில் குறிப்பிட்டுள்ள நிச்சயமான நடைமுறை செயல்முறைகளையும் அதோடு இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரால் கொடுக்கப்பட்டுள்ள நியாயப்படுத்தும் முயற்சிகளையும் நாம் ஆராய்ந்து அறிந்துகொள்வது அவசியமானதாகும்.



மிக.வந். அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை

■ நியாயப்படி பார்த்தால், பாப்பானவரால் எடுக்கப்பட்டுள்ள இந்த நடைமுறைகள் பாரம்பரிய வழிபாட்டை - திவ்விய பலிபூசையை மட்டுமல்லாது, ஏனைய தேவதிரவிய அனுமானங்களையும் கூட சாதாரணமாக நிறைவேற்ற வழிவகை செய்ய வேண்டும். இது, அகில திருச்சபை முழுவதற்குமல்லாது, (நவீன) ஆயர்களின் நியாயமற்ற அதிகாரத்தினால் பாதிக்கப்பட்டு இன்று செயலற்று போயிருக்கும் குருக்கள் மற்றும் விசுவாசிகளுக்கும் அளவற்ற ஞான நன்மையாகத் திகழும். ஆனாலும், வருகிற மாதங்களில், இந்த நடைமுறைகள் ஆயர்களாலும் பங்கு குருக்களாலும் எவ்வாறு செயல்படுத்தப்படப் போகின்றன என்பதை கவனிக்க வேண்டியது நல்லது. இந்தக் கருத்தை முன்னிட்டு, பாப்பானவருக்காக தொடர்ந்து ஜெபித்து, அவர் எடுத்த இந்த திடமான காரியத்தில் நிலைநிற்கும்படியாக மன்றாடுவோம்.

■ இந்த 'Motu Proprio' ஆணை மடலுடன் இணைத்து அனுப்பப்பட்ட கடிதமானது, பாப்பானவர் வெளியிட்ட மடலுக்கான காரணங்களைத் தருகிறது. எப்படியெனில் ஒரே வழிபாட்டு ரீதியின் கீழ், சம உரிமையும் அந்தஸ்தும் கொண்ட இரண்டு வடிவங்கள் - சாதாரண (புதுப்பூசை) மற்றும் அசாதாரண (பாரம்பரிய பூசை) என்று குறிப்பிட்டு பாரம்பரிய வழிபாட்டு முறையை மட்டுமே செய்விப்பது என்பதை மறுக்கும் இச்சொற்கள் காணப்படுகின்றன. இவை, திரிதெந்தீன் பலிப்பூசையை நிறைவேற்றுவதற்கு கொடுக்கப்படும் எந்த உத்தரவையும் வெளிப்படையாக எதிர்க்கும் ஆயர் பேரவைகளோடு எந்தவிதமான பிரச்சினையையும் உண்டுபண்ண வேண்டாமென்ற அரசியல் நோக்கமும் பாப்பரசரின் இக்கடிதத்தில் இருப்பதாக நாம் பொருள் கொள்ளலாம். அதோடு ''சீர்திருத்தத்தின் சீர்திருத்தம்''என்ற பாப்பானவருடைய விருப்பத்தையும் - அவரே இம்மடலில் குறிப்பிடுவது போல், அர்ச். 5-ம் பத்திநாதரின் பூசையும், 6-ம் சின்னப்பரின் பூசையும் ஒன்றுக்கொன்று நன்மை பயப்பவை என்ற கருத்தின் வெளிப்பாட்டையும் நாம் காணலாம்!

எப்படியாயினும் சரி, இந்த கடிதத்தில் 2000 வருடத்திய பாரம்பரியத்துடன், 2-ம் வத். சங்கத்திற்கும் அதிலிருந்து முளைத்த நவீன பூசைக்கும் தொடர்ச்சி இருக்கிறதென்று வலியுறுத்த விரும்பும் பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரின் விருப்பத்தை தெளிவாகக் காணலாம். பாப்பானவர் 2005, டிசம்பர் 22-ல் தமது க்யூரியா (Curia) அவையினருக்கு நிகழ்த்திய உரையிலேயே தெளிவாகக் கூறியது போன்று, 2-ம் வத். சங்கத்தின் காரணமாகத் தோன்றிய கருத்து வேறுபாட்டை - பிளவை மறுக்கும் செயலானது, உரோமைக்கும் அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபைக்கும் எழுந்துள்ள வேறுபாடு, வேதசத்தியங்களைப் பற்றியதே என்பதைக் காண்பிக்கின்றது. இந்த காரணத்திற்காக திருவழிபாடு சம்பந்தமாக 'Motu Proprio' ஆணை மடலின் மூலமாக முன்னோக்கி எடுத்து வைக்கப்பட்ட, மறுக்க முடியாத இம்முதல் படி, வேதசாஸ்திர சம்பந்தமான கலந்துரையாடல்களுக்கு இட்டுச் செல்ல வேண்டும். அதற்கு முன்பாக திருச்சபை விலக்கம் (அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை மற்றும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் நான்கு மேற்றிராணிமார்கள் மீதான அநியாயத் தண்டனை) என்ற அறிக்கையானது திரும்பப் பெறப்பட வேண்டும்.

பாப்பரசரால் அனுப்பப்பட்ட கடிதத்தில் அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை மற்றும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையைப் பற்றிய குறிப்போடும், பாரம்பரிய விசுவாச தீப்பந்தத்தை எடுத்து செல்லும் இளைய தலைமுறையினரின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையையும், நம் ஜெபவழிபாட்டு முறையைப் பாதுகாக்கும் நமது உறுதியான நிலைப்பாட்டையும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. சர்வேசுரனின் உதவியோடு, விசுவாச முறைக்காக போராடும் அதே உறுதியோடு விசுவாசத்தைக் காக்கவும் தொடர்ந்து போராட வேண்டும்.

மென்சிங்கன், ஜுலை 7, 2007

+ பெர்னார்டு ஃபெல்லே.

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன - (ஆசிரியர்)

## பரலோக மந்திரத்தின் வியாக்கியானம்

**எங்கள் பிதாவே:-** (தொடர்ச்சி)

ஆகையால்தான் ''என் பிதாவே'' என்று சொல்லாமல், ''எங்கள் பிதாவே'' என்ற சொல்லுகிறோம்.

இது நம்மைச் சுற்றியிருக்கும் அஞ்ஞானிகளையும் குறிக்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டியது. அவர்கள் நமக்கு அன்னியர்கள் அல்ல. நம்மைப்போல அவர்களும் சர்வேசுரனால் படைக்கப்பட்டிருப்பதால், நமது மெய்யான சகோதரர்களே. நம்மைப்போல் அவர்கள் இன்னும் சர்வேசுரனுடைய சுவீகாரப் பிள்ளைகளாகவில்லை என்பது மெய்தான். ஆனால் அவர்களும் தம்முடைய பிள்ளைகளாக வேண்டுமென்று சர்வேசுரன் சித்தமாகி, அதற்காக வேண்டிய வரப்பிரசாதங்களை அவர்களுக்கு கொடுத்து வருகிறார்.

நம்முடைய ஆண்டவர் நமக்காக மரித்தது போலவே, அவர்களுக்காகவும் மரணமடைந்து, அவர்களும் இரட்சண்யமடைய வேண்டுமென்று ஆசிக்கிறார். ஆதலால் கிறீஸ்துவர்களை நாம் நேசிப்பதுபோல், அஞ்ஞானிகளையும் நாம் நேசிக்கவேண்டிய கடமையுள்ளது. மேலும் நமது பிறர் சிநேகமும், நம்முடைய ஜெபங்களும் அவர்களுக்கு மிகவும் தேவை. ஆகையால் அவர்கள் மனந்திரும்புவதற்கு நமது நடத்தை இடையூறாயிராதபடி, நாம் அவர்களுக்கு முன்மாதிரிகையாக இருக்க வேண்டும். நமக்குக் கிடைக்கும் சகல சமயங்களிலும் அவர்களுக்கு நன்மை செய்ய முயலவேண்டும்.

**உம்முடைய இராச்சியம்:-** சர்வேசுரன் தம்முடைய இஷ்டப் பிரசாதத்தைக் கொண்டு நம்மிடத்தில் அரசாட்சி செய்ய வேண்டுமென்றும், சகல மனிதர்களும் மோட்ச பாக்கியத்தை அடையவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம். இதற்காக திவ்விய கர்த்தருடைய இராச்சியமாகிய திருச்சபை எங்கும் பரவி, சகல ஜாதி ஜனங்களையும் அவருடைய ஆளுகைக்கு உட்படுத்தும்படி வேண்டிக் கொள்கிறோம்.

**அப்பம்:-** அன்ன வஸ்திர முதலிய சரீர நன்மைகளையும், தேவ ஏவுதல், இஷ்டப்பிரசாதம், தேவநற்கருணை முதலிய ஞான நன்மைகளையும், சர்வேசுரன் நமக்கு அளிக்கும்படி மன்றாடுகிறோம்.

சேசுநாதர்சுவாமி 'அன்றன்றுள்ள எங்கள் அப்பம்' என்கிற வார்த்தைகளைச் சொல்லும் போது, திவ்விய நன்மையையும் குறித்திருக்கிறாரென்பதற்கு, அர்ச். பாப்பானவரின் பின்வரும் தீர்மானமே அத்தாட்சியாகும்.

''கிறீஸ்துவர்கள் அடிக்கடி மாத்திரமல்ல, ஆனால் தினந்தோறும் தேவநற்கருணை உட்கொள்ளவேண்டுமென்பதே திவ்விய கர்த்தருக்கும் திருச்சபைக்குமுள்ள மிகுந்த ஆசையாகும். இது குறித்து அவர்கள் எவ்வித ஜீவிய அந்தஸ்திலுள்ளவர்களானாலும், எப்பேர்ப்பட்ட தொழில் அலுவலில் உள்ளவர்களானாலும், **இஷ்டப்பிரசாதத்தோடிருந்து, பக்தியுள்ள சுத்த கருத்தோடு** நன்மை வாங்க ஆசைப்பட்டால், ஒருவரும் அதற்குத் தடை செய்ய முடியாது'' - (பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர் )

(தொடரும்)

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை



## அறிந்து கொள்வோம்!

[**கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். –** ஆசிரியர்]



**குருவானவர் ஜெபித்துக்கொண்டே பீடமேறுகிறார்**

### **பூசை ஆரம்பம்** (தொடர்ச்சி)

**– பீடத்தினடியில் ஆயத்த செபங்கள் –**

(Prayers at the foot of the Altar)

**– முடிவு ஜெபங்கள் –**

குருவானவர் பீடத்தினடியில் முடிவு ஜெபங்களை ஜெபிக்கத் துவங்கும் முன்பாக "**Dominus vobiscum... ஆண்டவர் உங்களோடு இருப்பாராக**" என்று முகமன் கூறி தன்னைத் தேற்றி ஆயத்தப்படுத்துகிறார். அதற்கு பீடப்பரிசாரகர்களும், விசுவாசிகளும் "**Et cum spiritu tuo... உமது ஆவியோடும் இருப்பாராக**" என்று பதில் முகமன் கூறி அவருக்காக ஜெபிக்கிறார்கள். இந்த முகமன் வாசகத்தைக் குருவானவர் திருப்பலி முழுவதிலும் எட்டு தடவைகள் சொல்லி பூசை நிறைவேற்ற தமது இயலாதத் தன்மையைச் சுட்டிக்காட்டி, தமக்காக விசுவாசிகள் மன்றாடக் கேட்கிறார்.

எட்டு தடவைகளில், 4 முறைகள் மக்களைப் பார்த்தும்; சபை ஜெபம் **(Collect)**, காணிக்கைகளை ஒப்புக்கொடுக்கும் முன்பாகவும், நன்மை உட்கொள்ளும் முன்னும், பின்னும்; மற்ற 4 தடவைகள் மக்களைப் பார்க்காமல் பீடத்தை நோக்கித் திரும்பியும்; பீடத்தினடியில் முதல்முறை, சுவிசேஷ வாக்கியத்திற்கு முன்பாகவும், தோத்திர முகவுரைக்கு **(Praefatio)** முன்பாகவும், கடைசி சுவிசேஷத்திற்கு முன்பும் ஜெபிக்கப்படுகிறது.

பூசை நிறைவேற்றும் குரு இடையிடையே ஏன் இதனைச் சொல்லுகிறாரென்றால், சர்வேசுரனின் வல்லமையுள்ள உதவியும், துணையும் தமக்குத் தேவையென்பதாலும், திருப்பலி நிறைவேற்ற ஆண்டவரின் வரப்பிரசாதம் தேவையாதலால் அதனை வேண்டி மன்றாடுவது முதல் காரணம். பூசை முழுவதிலும் சர்வேசுரனின் வரப்பிரசாதம் தம்மீது தொடர்ந்து பொழியப்படவும், பூசையில் பங்கேற்கும் விசுவாசிகளின் மன்றாட்டும் தம்மோடு இணைந்து தமது ஜெபத்தை வல்லமையுள்ளதாக்கி உதவும்படியாகவும் இதனைக் கூறுகிறார். அதோடு பூசை நிறைவேற்றும் குருவானவரின் ஆன்மாவோடு ஆண்டவரின் பிரசன்னம் இருக்க வேண்டும் என்ற திருச்சபையின் மக்களின் விருப்பத்தின் குரலாகவே, பதில் முகமன் கூறப்படுகிறது.

இந்த முகமன் வாக்கியத்தில் நல்லவர்களும், திருச்சபையின் பிள்ளைகளும் குருவோடு இணைந்து கொள்கிறார்கள். ஆண்டவர் எங்கு இருக்கிறாரோ, அங்கு அவரோடு அவரது சத்தியமும் வரப்பிரசாதமும் குடிகொள்ளும். அவரது சகாயமும் உதவியும், அவரது அன்பும் இரக்கமும், அவரது ஆசீர்வாதமும் சமாதானமும் அவர் இருக்குமிடத்தில் தங்கியிருக்கும். நமது சர்வேசுரனும், சிருஷ்டிகரும், இரட்சகரும், தேற்றரவாளரும், நமது நம்பிக்கையும், உயர்வான நன்மையும், நமது இறுதி கதியும், எல்லாமுமானவர் நம்மோடு இருக்கும்போது வேறு என்ன வேண்டும்? வேறு சிறந்தது, மேன்மையானது, மகிழ்ச்சி நிறைந்தது என்ன இருக்க முடியும்? இதனையெல்லாம் மனதில் இருத்தி சிந்தித்தால் தாய்திருச்சபை ஏன் திவ்விய பலியின்போது இடையிடையே "**ஆண்டவர் உங்களோடு இருப்பாராக... உமது ஆவியோடும் இருப்பாராக**" என்ற வார்த்தைகளை நம்மை உச்சரிக்கச் செய்கிறது என்பது தெளிவாகத் தெரியும்.

ஆண்டவருக்காக எந்த ஆன்மா ஆவலோடுக் காத்திருக்கிறதோ அதனிடம் ஆண்டவர் தமது வரப்பிரசாதங்களோடு நுழைவார். ஆண்டவரை அடையவேண்டுமென்ற ஆவல், ஆர்வம், ஆதங்கமும் கொண்ட விசுவாசிகள் பூசைக்கிருத்தியங்களில் குருவானவருக்கு தேவ உதவியை மன்றாடும்படியாகவே "**உமது ஆவியோடும் இருப்பாராக**" என்று விரும்பி ஜெபிக்கப்படுகிறது.

இந்தப் பரஸ்பர முகமன் மன்றாட்டினால், குருவானவரும், விசுவாசிகளும் ஒருவருக்கொருவர் தேவபிரசன்னத்தையும்; மகா பரிசுத்த திவ்விய பலி நிறைவேற்ற குருவுக்கும், பலியில் பங்கடையும் தகுதி பெற விசுவாசிகளுக்கும் தேவையான தேவ வரப்பிரசாதங்கள் மன்றாடப்படுகின்றன.

பின்னர் குருவானவர் அனைவரும் கேட்கும் வகையில் "**Oremus... ஜெபிப்போமாக**" என்ற அழைப்பை விடுத்து பீடமேற தயாராகிறார். இதனைச் சொல்லி முடிக்கும் வரை குருவானவர் பீடத்தில் ஏறுவதற்காக நிமிர்ந்து நிற்கிறார். இந்தக் கல்வாரி மலையின் இரகசியத்தில், சீனாய் மலையில் நின்ற மோயீசனைப் போல், ஆண்டவரின் நெருங்கிய அருகாமையில் நிற்கிறார். ஆகையால் பீடமேறிச் செல்லும்போதே, குருவானவர் பூசை நிறைவேற்ற தேவையான நிறைவான தூய்மையை - இதயச் சுத்தத்தை மன்றாடிக் கொண்டே பீடமேறுகிறார். குருவின் பீடமேறும் இந்த நிகழ்ச்சி, சிலுவையை சுமந்தவாறே கல்வாரி மலையேறும் நமதாண்டவருக்கு ஒப்பாகிறது. அன்று, நமதாண்டவர் கல்வாரியில் சிலுவை ஏந்தி, சிலுவையில் நிறைவேற்றிய அதே பலியைத்தான் இப்போது நமது தேவாலயப் பீடத்தில் புதுப்பிக்க - நிறைவேற்றக் குருவானவர் மெல்ல, பீடமாகிய கல்வாரி மலையில் ஏறிச்செல்கிறார்.

### குரு பீடத்தை நோக்கி ஏறிச்செல்லுதல்

குருவானவர் பீடத்தை நோக்கி உயரே ஏறிச்செல்லும்போது இவ்வாறு ஜெபிக்கிறார் "**Aufer a nobis, quaesumus Domine... ஆண்டவரே, தேவரீருடைய மகா பரிசுத்த சன்னிதானத்தில் நாங்கள் சுத்த மனதுடன் பிரவேசிக்க அருகராகும்படி, எங்கள் அக்கிரமங்களை எங்களிடமிருந்து அகற்றியருள தேவரீரை மன்றாடுகிறேன். எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துநாதர் பேரால். ஆமென்**" என்று ஜெபித்தவாறு செல்லுகிறார். அவரது மனம் "மேகங் கலைந்து போவது போல் உன் அக்கிரமங்களைப் போக்கினோம்; புகை மறைவது போல் உன் பாவங்களும் பறந்தன" (இசை. 44:22) என்ற ஆண்டவரின் வாக்குறுதிகளில் ஊன்றியவாறு; தமது ஆன்மாவை எல்லாத் தீமைகளிலிருந்தும், பாவத்தின் கறைகளிலிருந்தும் மேலும், மேலும் சுத்தமாக்க வேண்டும் என்று மன்றாடியவாறு, "ஈசோப் என்கிற புல்லினால் என் மேல் தெளித்தருளுவீர்; நானும் சுத்தமாவேன். நீர் என்னைக் கழுவுவீர்; வெண்பனிக்கட்டியிலுந் தூய்மையாவேன்" (சங். 50:7-8) என்ற சங்கீத வாக்கியத்தைப் போல் தன்னை ஆக்கும்படி மன்றாடுகிறார். அதனால் புதிய ஏற்பாட்டின் வரப்பிரசாதமாகிய பரிசுத்தத்தனத்தின் பரிசுத்தமான சன்னிதானத்தினுள் நுழைந்து நற்கருணைப் பலிபொருளை நிறைவேற்ற தகுதியாவார்.

பழைய ஏற்பாட்டில் பழைய சட்டத்தின் பரிசுத்தமான பரிசுத்த இடத்தில் தலைமைக்குரு மட்டுமே, அதுவும் வருடத்தில் ஒரு தடவை மட்டுமே நுழைய அனுமதிக்கப்படுவார். இது புதிய ஏற்பாட்டின் பரிசுத்தமான பரிசுத்த இடத்தின் நிறைவற்ற ஒரு உருவகமாகக் குறிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் புதிய ஏற்பாட்டின் சன்னிதானத்தில் தாழ்ச்சி நிறைந்த குரு தினமும் அனுமதிக்கப்படுகிறார். ஒவ்வொரு நாளும் பரிசுத்தங்களின் பரிசுத்தரான சேசுகிறீஸ்து, தமது சொந்தக் கரங்களால் நம்மை மோட்சமாகிய சன்னிதானத்தில் நம்மை கொண்டு சேர்க்க ஒவ்வொரு நாளும் பலியாகிறார். இப்போது குரு தலைகுனிந்து பீடத்தின் மீது தனது கரங்களைக் குவித்து வைக்கிறார்.

(தொடரும்)

## கத்தோலிக்க வழிபாட்டு சடங்குகளின் அர்த்தம்

### பீடங்களில் "அர்ச்சிஷ்ட கல்" பதிக்கப்பட்டு அதன் மீதுதான் பலி நிறைவேற்றப்படுகிறது!

**கத்தோலிக்கத் திருச்சபையில் திவ்விய பலிபூசை நிறைவேற்றப்படும் பீடங்களில் அர்ச்சிஷ்டவர்களின் பரிசுத்த பண்டங்கள் – அருளிக்கங்கள் (Relics) பதித்துள்ள "அர்ச்சிஷ்ட கல்"லின் மீதுதான் பலிபூசை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பது திருவழிபாட்டு ஒழுங்கு! இது ஏனெனில் திருச்சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் (கி.பி.300) உரோமையில் கிறீஸ்தவர்கள் வேதகலாபனைக்கு உள்ளானபோது பலிபூசையானது கல்லறைச் சுரங்கங்களில்தான் இரகசியமாக நடைபெற்று வந்தது. பூமிக்கடியிலுள்ள வேதசாட்சிகளின் கல்லறைகளின் மேல் பீடம் அமைத்து விசுவாசிகள் திவ்விய பலிபூசை கண்டு வந்தனர். அதன் அடிப்படையில்தான் இன்றும் கத்தோலிக்க பீடங்களில் வேதசாட்சிகள் மற்றும் அர்ச்சிஷ்டவர்களின் அருளிக்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டும், அர்ச்சிஷ்ட கல்லில் பதிக்கப்பட்டும் வருகின்றன!**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (2) சர்வேசுரனுடைய அர்ச்சிஷ்ட மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



அர்ச். கன்னிமரியம்மாள் சர்வேசுரனுடைய மாதா! இது எத்தகைய பாக்கியம்! மகிமை!! மாதாவின் எல்லா மகிமைப் பெருமைகளிலெல்லாம் "இரத்தினமாக" பிரகாசிக்கும் இது ஒரு வேத சத்தியம்!

ஆம்! மகா பரிசுத்தவதியான கன்னிமரியாய் "கடவுளின் தாய்" என்பது பரம இரகசியம் - மகா பரிசுத்த தமத்திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரனின் மனிதாவதார பரம இரகசியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு விசுவாச சத்தியம்! சேசுகிறீஸ்து மனுவுருவெடுத்த சுதனாகிய சர்வேசுரன்; எனவே அவளை ஈன்றெடுத்தவள் "சர்வேசுரனின் தாய்" என்றழைக்கப் படுவது முற்றிலும் சரியே. அதற்கு மாறானவைகள் தப்பறையென்று திருச்சபை கண்டித்து ஒதுக்குகிறது. எபேசியுஸ் பொதுச்சங்கம் கி.பி.431-ல் கூடி, இந்தச் சத்தியத்திற்கு விரோதமான போதனைகளைச் சபித்து "மகா பரிசுத்த கன்னிமரியம்மாள் சர்வேசுரனின் தாய்" என்று பிரகடனம் செய்துள்ளது.

### வேதாகமச் சான்றுகள்:-

பரிசுத்த கன்னிமரியம்மாள் சர்வேசுரனுடைய தாயாக இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டும் வேதாகம வசனங்கள் அநேகமுள்ளன. அவற்றில்:

(1) "... **இஸ்பிரீத்துசாந்து உமது மேல் எழுந்தருளி வருவார்; உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும்; ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார்**" (லூக். 1 : 3 5 ).

(2) "... **என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்குக் கிடைத்ததெப்படி...**" (லூக். 1 : 4 3 ).

(3) "... **காலம் நிறைவேறியபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும்... தம்முடைய சுதனை சர்வேசுரன் அனுப்பினார்...**" (கலாத்தி. 4 : 5 ).

### புனிதர்களின் போதனைகள்:-

பரிசுத்த கன்னிமரியாய் சர்வேசுரனின் தாயார் என திருச்சபையின் பிதாப்பிதாக்களும், புனிதர்களும் ஏற்றுப் போதித்து வந்துள்ளனர். "**தேவதாய்**" - "**Theotokos**" என்ற வார்த்தையை திருச்சபையின் பிதாப்பிதாவான ஒரிஜன் என்பவர் முதன் முதலில் பயன்படுத்தி மாதாவை அழைத்தார்.

அர்ச். இரேணிமுஸ் "**சர்வேசுரன் மரியன்னையால் நமக்கு கொடுக்கப்பட்டார்**" என்கிறார். அர்ச். நாஸியான் கிரகோரியாரோ "**மரியம்மாள் கடவுளின் தாய் என்று ஏற்றுக்கொள்ளாத எவனும் சர்வேசுரனிடமிருந்து புறம்பாக்கக் கடவான்**" என்று கூறுகிறார். கத்தோலிக்கத் திருச்சபையும் மாதாவை மன்றாடும் '**அருள்நிறைந்த**' மந்திரத்தில் "**அர்ச். மரியாயே சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் ஆமென்**" என்று மன்றாடுகிறது.

தொன்றுதொட்டு கத்தோலிக்கக் கிறீஸ்தவனின் வாழ்வின் ஆதாரமாக இருக்கும் தேவதாயைப் போற்றுவது என்பது கூடாத ஒன்றா? இல்லை! ஆகவே பரிசுத்த கன்னிகையை "**சேசுவின் தாய் - தேவதாய், என்னுடைய தாய்**" என்று தமது வாழ்நாளில் எப்போதும் அழைத்து வந்த அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவோடு சேர்ந்து நாமும் மரியன்னையை "**சர்வேசுரனுடைய தாய், என்னுடைய தாய்**" என்று கூறி மகிழ்வோமாக. அதுவே நமது நாவில் என்றும் ஒலிப்பதாக!

**சர்வேசுரனுடைய அர்ச்சிஷ்ட மாதாவே**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

# நிறைவேறிவரும் தீர்க்கத்தரிசனங்கள்

**(16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வண. மரியானா தாயாருக்கு நமதாண்டவரும் மாதாவும் வெளிப்படுத்திய தீர்க்கத்தரிசனங்கள் நம் காலத்தில் இப்போது நிறைவேறி வருகின்றன. அவைகளுக்காக அக்காலத்திலேயே மரியானா தாயார் தன்னையே பலியாக்கும்படி கேட்டுகொள்ளப்பட்டாள். இத்தீர்க்கத்தரிசனங்களை நாமும் அறிந்து கொள்வது நம்மையும் ஜெபிக்கத் தூண்டும் - ஆசிரியர்)**

## "துறவியருக்காக மன்றாடுங்கள்"

நமதாண்டவர் "எல்லா காலங்களிலும் எனது திருச்சபையையும், உண்மையை ஏற்றுக்கொள்ளாத உலகத்தையும் காப்பாற்றுவதற்கு தீரமிக்க, துணிவுள்ள ஆத்துமங்கள் எனக்குத் தேவைபடுகிறார்கள்" என்று கூறிய நமதாண்டவர் உலகில் எல்லா துறவற சபைகளுக்கும் உறுதுணையாகவும் மிக முக்கிய அடிப்படை ஆதாரமுமாக விளங்கக்கூடியவை: "ஆண்டவரின் திருப்பாடுகளின் மீதான பக்தி, திவ்விய நற்கருணை பக்தி, மற்றும் தேவதாய் மீது பக்தி" என்று சங். மரியானா தாயாரிடம் அறிவுறுத்தினார்.

மேலும், "மக்களுடைய பாவங்களுக்காக மட்டுமல்லாமல், குருக்கள் மற்றும் துறவற சபையினருடைய பாவங்களுக்காகவும் தேவ நீதி உலகின் எல்லா நாடுகள் மீது கொடூர சுத்திகரிப்பு தண்டனைகளை அனுமதிக்கிறது என்பதையும் தெரிந்து கொள். ஏனெனில் குருக்களும், துறவியரும் உலகின் உப்பாகவும், சத்தியவான்களாகவும், தேவசாபத்தை தடுப்பவர்களாகவும் ஜீவிப்பதற்காகவே அழைக்கப்படுகின்றனர். இந்த உன்னதமான தேவ அலுவலிலிருந்து விலகி தவறான பாதையில் போவதால் அவர்கள் தங்களையே எவ்வளவுக்கு சிறுமைபடுத்துகின்றனர் என்றால், சர்வேசுரனுடைய கண்களுக்கு முன்பாக அவர்கள் தண்டனையின் உக்கிரத்தை துரிதப்படுத்துகின்றனர்" என்று வேதனையுடன் கூறினார். (பரிசுத்த குருக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் தேவ ஆசீர்களை வருவிக்கின்றனர். பங்கு குருக்களின் பாதுகாவல ரான அர்ச். மரிய வியான்னி அருளப்பர் ஆர்ஸ் பங்கில் ஜீவித்த 41 வருடங்களில் அப்பட்டணத்தில் புயல் மழை போன்ற இயற்கை சீற்றங்களால் எந்தவிதமான சேதம் ஒருபோதும் ஏற்பட்டதில்லை!)

மேலும், நமதாண்டவர் சங். மரியானா தாயாரிடம் குருக்களின் அர்ச்சிஷ்டதனத்திற்காக ஜெபதபம் மற்றும் பரிகார முயற்சிகளால் தங்களையே பலியாக்கித் துன்புறும் உன்னத அலுவலை செய்துவரும் ஆத்துமாக்களால், தாம் மிகவும் மகிழ்வதாகக் கூறினார். மேலும் அந்த நல்ல ஆன்மாக்கள் மோட்சத்தில் மிக விசேஷமான மகிமையைப் பெறுவார்கள் என்றும் வாக்களித்தார்.

பின்னர் நமதாண்டவர், தமது திருஇருதயத்திற்கு மிகவும் பிரியமான துறவற சபைகளைச் சேர்ந்த ஆன்மாக்களின் நன்றிகெட்டத்தனத்தையும், நம்பிக்கை துரோகத்தையும் குறிப்பிட்டு, "இவை, என் தேவ நீதி எனது நேசத்திற்குரிய அடைபட்ட துறவற மடங்களின் மேலாகவும், அவை இருக்கும் நகரங்களின் மேலும் இறங்க வேண்டுமென்று என்னை நிர்ப்பந்திக்கின்றன. ஏனெனில் எனக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவர்களும், எனக்கு முழு சொந்தமானவர்களுமான இத் துறவிகள் என்னை முழுவதுமாகப் புறக்கணிக்கின்றனர். மற்ற விசுவாசிகளை விட அவர்கள் மீது கொண்ட சிநேகத்தினாலேயே நான் திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கிறேன் என்பதை நினைக்காமல், என்னை திவ்விய நற்கருணையில் தனிமையில் விட்டுவிட்டு செல்கிறார்கள். விவேகமற்ற முறையில் சபைக்கு ஆட்களைச் சேர்ப்பதும், சபை அதிபர்களின் அனுமதியுடன் மடத்திற்குள் நிலவும் முறைகேடுகள் ஆகியவை துறவற சபைகளின் அழிவிற்கே வழிவகுக்கும் நாசங்களாகும். அத்தகைய மடங்கள், அதிகமான தபத்தினாலும், சிறுமைகளை ஏற்பது மற்றும் துறவற ஒழுங்குகளை தினமும் பிரமாணிக்கமாய் அனுசரிக்கும் நல்ல துறவியர்களால் மட்டுமே பாதுகாக்கப்படும். வேதனை காலங்களில் இத்தகைய கெட்டுப்போன சபை உறுப்பினர்களுக்கு ஐயோ கேடு! எனது நேசப்பத்தினியே அவர்களுக்காக அழு! அக்காலத்தின் உபாதனைகளின் நேரத்தைக் குறைக்கும்படியாக மன்றாடு! தங்களுடைய அகங்காரத்தினாலும், உயர்ப்பதவியையும் அதிகாரத்தையும் கைப்பற்றுவது போன்ற வீண் மகிமையைத் தேடுவதில் அநேக வரப்பிரசாதங்களை வீணாக்கும் துறவியர்கள் மிகக் கண்டிப்பான விதமாக தண்டனைக்குள்ளாவார்கள்" என்று எச்சரிக்கை செய்தார்.



வண. மரியானா தாயார்

நமதாண்டவரின் திருஇருதயத்தின் மகா கொடூரமான உள்ளரங்க உபாதனையாக இருப்பவை, பல லட்சக்கணக்கான மனிதர்களிலிருந்து தமது பத்தினிகளாகவும், ஊழியர்களாகவும் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆத்துமங்களின் நன்றிகெட்டத்தனமும், அலட்சியமும் மற்றும் அந்த ஆத்துமங்களால் முழுவதுமாக அவர் தனிமைப்படுத்தப்படுவதும்தான் என்று சங். மரியானா தாயார் அறிந்து கொண்டாள். இது எப்படி இருந்தபோதிலும், திவ்விய நற்கருணையாகிய மகா பரிசுத்த தேவதிரவிய அனுமானத்தில் நமதாண்டவர் தமது ஞான பத்தினிகளாகிய கன்னியர்களோடு ஒரே கூரையின் கீழ் ஜீவிப்பார். தமது குருக்களின் எளிய அழைப்பிற்கிணங்கி, திவ்விய பலிபூசையின் மகா பரிசுத்த வசீகர வேளையில் வந்து இறங்குவார் என்றும் மரியானா தாயார் உணர்ந்து கொண்டாள்.

(தொடரும்)

# அர்ச். இஞ்ஞாசியார் தியானமும்,
## அர்ச். 10-ம் பத்திநாதர் சபையும்


தியானம் என்ற சொல்லுக்கு விலகி "தனித்திருத்தல்" என்று பொருள் கொள்ளலாம். அதாவது உலக சந்தடிகள், ஆரவாரங்கள் அனைத்தையும் விட்டு விலகி, சர்வேசுரனை மட்டுமே நாடி, அவரது நன்மைத்தனங்களையும், அவர் நமக்கு அருளின போதனைகளைத் தியானித்து, நமது பரிதாபகரமான நிலையை உணர்ந்து, நமது குற்றங்குறைகளை அறிந்து, தேவ உதவியோடு நல்ல பிரதிக்கினை செய்து, தேவ சித்தத்திற்கேற்ப நமது வாழ்வை அமைத்துக்கொள்ள உதவும் ஒரு சாதனமே தியானம் அல்லது தியான முயற்சிகள் எனப்படும். கத். திருச்சபையில் அநேக தியான முயற்சிகள் வழங்கப்பட்டு வந்தாலும் அர்ச். இஞ்ஞாசியார் வழங்கிய தியான முயற்சிகளே அதிகம் புகழ் பெற்றுத் திகழ்கின்றது. இந்த பிந்திய காலங்களில் தப்பறைகளும், பதிதங்களும் மிகுந்த உலகில் கத்தோலிக்க மக்களுக்கு சர்வேசுரனை நினைப்பதற்கும், அவரது அன்பை உணர்ந்து, அவரை நேசித்து, வாழ்க்கையை சீர்செய்து, சத்தியத்தில் நிலைநின்று வாழ இந்தத் தியான முயற்சிகள் உதவுகின்றன என்றால் மிகையாகாது.

### அர்ச். இஞ்ஞாசியார் மன்ரேசாவில் பெற்ற ஞானம்!

ஸ்பெயின் நாட்டில் லொயோலா கோட்டையில் பிரபுக்கள் குடும்பத்தில் 1491-ல் பிறந்த அர்ச். இஞ்ஞாசியார், சிறந்த போர் வீரராகப் பயிற்சி பெற்று, 14 ஆண்டுகள் இஸபெல்லா அரசியின் முக்கிய பொக்கிஷதாரராகப் பணியாற்றி, 1521, மே 20-ல் பிரெஞ்சு படையை எதிர்த்து பம்பலூனா கோட்டை முற்றுகையை முறியடிக்க நடந்த சண்டையில் காலில் காயமுற்றார். நீண்ட கால சிகிச்சையின்போது கிடைத்த அவகாசத்தில் அர்ச்சிஷ்டவர்களின் வரலாற்றை வாசித்து மனம் திரும்பினார். கிறீஸ்து அரசர் ஒருவருக்கே ஊழியம் புரிய தன்னையே நேர்ந்து கொண்டு பார்சலோனா துறைமுகத்திற்கு பயணமாகும் போது ''மன்ரேசா'' என்ற சிற்றூரில் தங்கினார். அங்குள்ள ஏகாந்த குகையில் சில நாட்களிருந்து ஜெபிக்க விரும்பிய இஞ்ஞாசியார், ஒரு ஆண்டு காலம் அங்கேயே தங்கியிருந்து ஜெபத் தியானங்களிலும், ஒறுத்தல் முயற்சிகளிலும் ஈடுபட்டார். அப்போதுதான் தேவதாயை தரிசனையில் கண்டு அவர்களின் உதவியால் ''தியானப் பயிற்சிகளை'' எழுதினார். அவர் எழுதிய – வடிவமைத்த அந்த தியானப் பயிற்சி முறையே அர்ச். இஞ்ஞாசியார் தியானம் என்று அழைக்கப்படுகிறது. பின்னர் தேவ உதவியால் தமது 32-வது வயதில் லத்தீன் மொழி கற்று, 1528 முதல் 1535 வரை பாரீஸ் பல்கலைக்கழகத்தில் வேதசாஸ்திரம் கற்று தமது குருத்துவ படிப்பைத் தொடர்ந்தார். 1534, ஆகஸ்ட் 15-ல் அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் உட்பட 7 சகாக்களோடு சேசுவின் வீரர்களாக அவரது ஊழியத்தில் தன்னையே அர்ப்பணித்தார். அதுவே 1537-ல் சேசு சபையாக உருவெடுக்க காரணமாயிற்று. அர்ச் இஞ்ஞாசியாரின் சேசு சபை திருச்சபையெங்கும் பரவி அக்காலத்தில் பீடித்திருந்த புராட்டஸ்டான்ட் தப்பறைகளை எதிர்த்து முறியடித்து ஆன்மாக்களை காத்தது என்பதை நாம் அறிவோம். சேசு சபையாரின் வெற்றிக்கு பெரிதும் உதவியது அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பயிற்சிகளே. அதுவே அகிலத் திருச்சபையெங்கும் பரவி ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு காரணமாயிற்று.




அர்ச். இஞ்ஞாசியார்



மன்ரேசா குகையில் தேவதாயின் உதவியால் தியானப்பயிற்சிகளை எழுதும் அர்ச். இஞ்ஞாசியார்

### சங். வாலே சுவாமியும், 5 நாள் இஞ்ஞாசியார் தியானமும்

19-ம் நூற்றாண்டில் சேசு சபையார் மீண்டும் புத்தெழுச்சி பெற்றனர். தங்களது ஞானத் தந்தையின் தியான பயிற்சிகளை தங்களது அப்போஸ்தலத்துவ ஆயுதமாகக் கொண்டு மீண்டும் கிளர்ந்தெழுந்தனர். அக்காலத்தில், தொழில் புரட்சி மனிதனை உழைக்கும் இயந்திரமாக ஆக்கி விட்டிருந்தது. பொருளாதாரக் காரணங்களுக்காக ஞான வாழ்க்கை புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையில் 30 நாட்கள் தியானப் பயிற்சி என்பது இயலாத ஒன்றாகி விட்டது. ஆனாலும் சர்வேசுரன் தமது ஊழியத்திற்கென்று ஒரு அப்போஸ்தலரை ஏற்படுத்தி, 30 நாள் ஞானபயிற்சியை அதன் சாரம் இழக்காமல் சுருக்கி 5 நாள் பயிற்சியாக்கி நவீன மனிதனுக்கு வழங்கி உதவ வழிவகுத்தார். அந்த அப்போஸ்தலர் தான் சங். பிரான்சிஸ் தே பால் வாலே சுவாமி (Fr. Francis de Paul Vallet). வட இஸ்பானிய பகுதியில் 1883-ல் தோன்றிய இவர் சேசு சபையாரிடம் கல்வி பயின்று பார்சலோனா பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை முடித்து, பல்வேறு



சங். பிரான்சிஸ் தே பால் வாலே சுவாமி

அமைப்புகளில் உயரிய பதவி வகுத்து, உலகின் தீமைகளால் பாதிக்கப்பட்டு விசுவாசத் தளர்ச்சியடைந்தார். ஆனாலும், சர்வேசுர னுடைய உதவியை நாடி, தன்னை வழிநடத்தும்படி மன்றாடினார். தனிமை யைத் தேடி, எங்கு அர்ச். இஞ்ஞாசியார் தேவமாதா வின் தரிசனம் பெற்று தியானப்பயிற்சி முறையைப் பெற்றாரோ, அதே மன்ரேசாவில் சேசு சபையாரின் உதவியோடு 30 நாட்கள் தியானத்தில் ஈடுபட்டு தேவ உதவியால் முழுவதுமாக மாற்றமடைந்து, உலகை வெறுத்து கிறீஸ்துவுக்காக தன்னையே அர்ப்பணித்தார். பின்னர் சேசு சபையில் சேர்ந்து நவசந்நியாசத்தில் உட்பட்டார். உலகத்தையே சேசுவிடம் கொண்டு வர வேண்டும், அதற்கு ஞானப்பயிற்சியே சிறந்தது என்று உணர்ந்து அதனைப் பரப்ப முடிவு செய்தார். 1920-ல் குருப்பட்டம் பெற்று 30 நாட்களில் இருந்த அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பயிற்சியை 5 நாட்களில் செய்யும் விதமாக அதன் சாரம் சற்றும் குறையாமல் தியான முறையை நடைமுறைப்படுத்தலானார். பின்னர் சேசு சபையிலிருந்து விலகி, ''**கிறீஸ்து அரசரின் பங்கு ஒத்துழைப்பார்கள்**'' என்ற ஒரு அமைப்பை 1922-ல் துவங்கினார். அதன் உறுப்பினர்கள் அர்ச். இஞ்ஞாசியாரின் முறையிலான தியானத்தைப் போதிப்பதில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர். முதல் 5 ஆண்டுகளில் அவரது முயற்சியால் 12,643 பேர் தியானப்பயிற்சி பெற்று ஆன்ம பயனடைந்தார்கள். சங் வாலே சுவாமி 1947-ல் மரணமடைந்தார். அதற்குப் பிறகும் அவரது பணியை அவரது அமைப்பினர் தொடர்ந்தனர். அவர்களில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சங். லூயிஸ் மரிய பாரியேல் சுவாமியும் (Fr. Lodovic-Marie Barielle) ஒருவர். அர்ச். இஞ்ஞாசியார் தியானப்பயிற்சியை 5 நாட்களில் சுருக்கி வழங்குவதில் சிறந்தவர். அப்போது 2-ம் வத்திக்கான் சங்கத்தின்படி அனைத்து அமைப்புகள், குருமடங்கள், துறவறமடங்கள் அனைத்தும் நவீனமயமாக்கப்பட்டன. தியான முறையில் எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டு வரக்கூடாது என்ற சங். வாலே சுவாமியின் கட்டளையின்படி மாற்றங்கள் கூடாதாகையால், புகுத்தப்பட்ட மாற்றங்களைக் கடுமையாக எதிர்த்தார். ஆனாலும் அவரது அமைப்பில் புகுத்தப்பட்ட நவீனத்தால் தியானம் கொடுக்கும் அலுவல் மறையலாயிற்று !

## அர்ச். 10-ம் பத்திநாதர் சபையும் அர்ச். இஞ்ஞாசியார் தியானமும்

இந்நிலையில் தான், 1970-ல் அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகையின் பாரம்பரிய குருமடத்தை நிறுவி நடத்தும் அப்போஸ்தலத்துவத்தைக் கேள்வியுற்றார். அதே சமயம் பிரான்ஸ் நாடெங்கும் லெஃபவர் ஆண்டகைக்கு எதிராகப் பரப்பப்படும் அவதூறான வதந்திகளைக் கேள்விப்பட்டு, அதிமேற்றிராணியார் ஆண்டகையை மனம் மாற்றம் செய்யலாம் என்ற நோக்கத்தோடு அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் தலைமை இடமான ஈக்கோனுக்கு (Econe) வந்து லெஃபவர் ஆண்டகையைச் சந்தித்தார். அங்கு அவர் திருச்சபையின் பாரம்பரியத்தை, பூசையை, குருத்துவத்தை காக்க அவர் ஆற்றி வரும் அரும்பணிகளைக் கண்டு வியந்து, இதுவரை தாம் கொண்டிருந்த தவறான எண்ணத்தை மாற்றி திருச்சபைக்காக உழைக்க தம்மையும் சேர்த்துக் கொள்ளும்படி லெஃபவர் ஆண்டகையிடம் விண்ணப்பித்தார்! (-வந். லெஃபவர் ஆண்டகை யை மனமாற்றம் செய்ய வந்த சங். பாரியேல் சுவாமி மனம் மாறினார்!)

வயதுசென்ற அவர், ஈக்கோன் குருமடத்தின் ஆன்மகுருவாக நியமிக்கப்பட்டார். அனுபவமும், திறமையுமிக்க குருவானவரான சங். பாரியேல் சுவாமி, நவீன உலகில் இளம் குருக்களை உருவாக்கும் கடினமான பணியில் உதவினார். தாம் புலமைப் பெற்றிருந்த அர்ச். இஞ்ஞாசியாரின் கொள்கைகளை இளம் குருமாணவர்களுக்குப் போதித்தார். முக்கியமாக, சங். வாலே சுவாமியால் தேவ ஏவுதலால் தயாரிக்கப்பட்ட 5 நாள் தியான முறையை அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அவ்வப்போது தியானங்கள் நடத்தி அநேகக் குருக்களைப் பயிற்றுவித்தார். 1983-ல் காலமான சங். பாரியேல் சுவாமியே, அர்ச். 10-ம் பத்திநாதர் சபையில் அர்ச். இஞ்ஞாசியார் தியானமுறை பரவக் காரணமானார். அவர் அன்று விதைத்த விதை இன்று மரமாக முளைத்து நூற்றுக்கும் மேற்பட்ட அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்கள் அர்ச். இஞ்ஞாசியார் தியானபயிற்சி வழங்குவதில் மிகவும் திறமைப் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள்.



சங். லூயிஸ் மரிய பாரியேல் சுவாமி

சர்வேசுரனால் ஆன்ம ஈடேற்றத்திற்கு அன்று அர்ச். இஞ்ஞாசி யார் மூலம் கொடுத்த தியான பயிற்சிகள், இன்று இயந்திரமயமாகிப் போன மனிதனுக்கு ஆன்ம உண வாக, சாரம் குறையாமல் சுருக்கி சங். வாலே சுவாமி யின் வழியாக வழங்கி யுள்ளார். சங். வாலே சுவாமியிடமிருந்து சங். பாரியேல் சுவாமியாரால் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த அரிய ஞானப்பயிற்சி முறைகள் அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபைக்குக் கொடுக்கப்பட்டு, அக்குருக்கள் வழியாக ''அனைத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிக்கும்'' பணி மேற்கொள்ளப்பட்டு, திருச்சபையின் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.


# இந்தியாவின் முதல் அர்ச்சிஷ்டவளாகிறாள்

# முத். சகோதரி அல்போன்ஸம்மாள்!

கேரளாவைச் சேர்ந்த முத். சகோதரி அல்போன்ஸம்மாளின் புனிதப்பட்டத்திற்கான அறிவிப்பு பிரகடனத்தில் பாப்பானவர் 16-ம் ஆசீர்வாதப்பர் கடந்த 1-6-2007 அன்று கையொப்பமிட்டார். இதன் மூலம் முத். சகோதரி அல்போன்ஸம்மாள் இந்தியாவின் முதல் அர்ச்சிஷ்டவள் என்ற அந்தஸ்தைப் பெறுகிறாள்.

கேரளாவில் கோட்டயத்தருகே உள்ள சிறு கிராமத்தில் 1910, ஆகஸ்ட் 19-ல் பிறந்த அல்போன்ஸம்மாள் அன்னகுட்டி என்று பெயரிடப்பட்டாள். பிறக்கும் போதே தாயை இழந்த அவள் தாயின் சகோதரியால் வளர்க்கப்பட்டாள். சிறு வயதிலிருந்தே விசுவாசத்திலும், கிறிஸ்தவ நல்லொழுக்கத்திலும் வளர்க்கப்பட்ட அவள் தன்னையே சேசுவுக்கு அர்ப்பணித்து கன்னியராக விரும்பி தமது 17வது வயதில் 1927-ல் பரணங்ஙானம் என்ற இடத்திலுள்ள மலபார் ஏழை கிளாரம்மாள் சபையில் சேர்ந்தாள். சபையில் "அல்போன்ஸா" என்ற பெயரை தேர்ந்தெடுத்த அவள் 1936-ல் நித்திய வார்த்தைப்பாட்டைக் கொடுத்தாள். சபையில் ஆசிரியையாகப் பணியாற்றிய அல்போன்ஸம்மாள் வியாதியுற்று அவதிப்பட்டாள். தமது வியாதி நோவுகளை, துன்பங்களை சேசுவின் பாடுகளோடு ஒன்றித்து அமைந்த மனதோடு மகிழ்ச்சியோடு அனுபவித்த அல்போன்ஸம்மாள் தமது 36-வது வயதில் 1946 ஜூலை 28-ம் நாள் மரணமடைந்தாள்.

தமது துன்பங்களை குறிப்பிட்ட அல்போன்ஸம்மாள் ''அவை சேசுவால் எனக்குத் தரப்பட்டவை. சிலுவைகளைத் தருவதில் தான் சேசு தமது அன்பை வெளிப்படுத்துகிறார். தாம் நேசிப்பவர்களுக்குத்தான் அவர் சிலுவைகளை அனுப்புகிறார்'' என்று அடிக்கடிக் கூறுவாள். ஒரு சமயம் கடுமையான வேதனையில் துடித்த அல்போன்ஸம்மாள் "ஓ, ஆண்டவரே, நான் இன்னும் அதிகமாக அமைதியில் துன்புற சிலுவைகளைத் தாரும். எனக்குக் கொடுக்கப்பட்ட துன்பத்தின் பானத்தை ஒரு துளியையும் விடாது பருக உதவும்'' என்று மன்றாடினாள்.



முத். சகோதரி
அல்போன்ஸம்மாள்

அவளது வேண்டுதலினால் அநேகப் புதுமைகள் நிகழத் துவங்கியதால் வெகு விரைவில் அவளது கல்லறை திருயாத்திரைத்தலமாக மாறியது! அவளது முத்திபேறு பட்டத்திற்கான நடவடிக்கைகள் 2-12-1953-ல் துவங்கி, 1986-ல் பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பரால் முத்திபேறு பட்டம் வழங்கப்பட்டது. இன்று சகோதரி அர்ச்சிஷ்டப்பட்டம் வழங்கப்படுகிறாள்!

இந்தியர்களாகிய நாம் அவளது மகிமையில் மகிழ்ச்சி கொள்வோம். அவளது நன்மாதிரிகையைப் பின்பற்றி அவளது மகிமையிலும் பங்கடைவோம்!

**அர்ச். அல்போன்ஸம்மாளே,**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

# கார்மெல் உத்தரியம் அணிந்து கொள்வோம்!

சர்வேசுரன் தமது மக்களாகிய நாம் இரட்சண்யமடைய திருச்சபையின் மூலம் எண்ணற்ற உதவிகளையும், உபாயங்களையும் தந்து வருகிறார். அவைகளில் அருள் கருவிகளும் (Sacramentals) ஒன்று. இவை தேவ உதவியால் நம்மை இவ்வுலக ஆபத்துக்கள், தீமைகளிலிருந்தும், நித்திய கேட்டிலிருந்தும் பாதுகாக்கின்றன. கார்மெல் உத்தரியமும் அப்படித்தான். இது தேவமாதாவால் நேரடியாகத் தரப்பட்டதால் அதன் சிறப்பும், வல்லமையும் அதிகமாக உள்ளது.

1251-ம் ஆண்டு ஜூலை 16-ல் கார்மெல் சபைத் தலைவராயிருந்த அர்ச். சைமன் ஸ்டாக் என்பவருக்கு மாதா தரிசனையாகி, கார்மெல் உத்தரியத்தைக் கொடுத்து "இதை அணிந்தவர்களாய் மரிக்கிறவர்கள் நரக நெருப்பில் விழமாட்டார்கள்'' என்று வாக்களித்தார்கள். அந்த வாக்குறுதி இன்று வரையிலும் நிலைத்திருப்பதை உத்தரிய பக்தியால் நடந்த புதுமைகள் எண்பிக்கின்றன. எனவே மாதாவின் மக்களாகிய நாம், நமதன்னை தந்த கார்மெல் உத்தரியத்தை அணிந்து அவர்களின் பாதுகாவலில் நம்மை ஒப்படைப்போம்!



கார்மெல் மலை மாதா

# செய்திகள்

## பிரான்ஸ் நாட்டில் விசுவாச இழப்பு !

சமீபத்திய செய்தியின்படி பிரான்ஸ் நாட்டில் பெருவாரியான மக்கள் கத்தோலிக்கரல்லாதவர்களாகி விட்டார்கள். நவீனத்தால் உலகாதாய கொள்கையால் விசுவாசத்தை இழந்ததால், திருச்சபையின் "தலை மூத்தமகள்" என்று அழைக்கப்பட்ட பிரான்ஸ் நாடு கத்தோலிக்க நாடு என்ற தமது மகிமையை இழந்து நிற்கிறது! ஆயினும் அந்நாட்டில் 200 பாரம்பரியக் குருக்களும், 1000 துறவிகளும் விசுவாசத்தில் உறுதியுடன் வாழ்வது ஆறுதலான செய்தி. பிரான்ஸ் நாடு தமது விசுவாசத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்!

### அறிவிப்புகள்:

## மரியாயின் மாநாடு !

பாளையங்கோட்டை நமது சபையின் குருக்கள் இல்ல வளாகத்தில் பரலோக மாதா திருநாளன்று 15.8.2007 (புதன் கிழமை) மரியாயின் மாநாடு நடைபெறும். ஆடம்பர திவ்விய பலிபூசை, புதுநன்மை வழங்குதல், மாதா சுரூப பவனி, ஞான உரைகள் என்ற நிகழ்ச்சிகளோடு, புராட்டஸ்டாண்ட் பதிதத்தை மறுத்து சத்திய வேதத்திற்குட்படும் சடங்கும் நடைபெறும். பங்கு பெறுவோருக்கு மதிய உணவு வழங்கப்படும். எனவே அனைவரும் இந்தத் திருவிழாவில் பங்கேற்று நமது தேவ அன்னையின் விண்ணேற்பு திருநாளை சிறப்பிப்போமாக.

## இந்தியாவிற்கான புதிய சிரேஷ்டர் !

இந்தியாவின் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் புதிய சிரேஷ்டராக சங். ராபர்ட் புருச்சியானி சுவாமிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் விரைவில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார்கள்.

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும்:

**பாளையங்கோட்டை:**

அர்ச். தமத்திருத்துவ குருக்கள் இல்லம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389; 2586201.

**சிங்கம்பாறை :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை. முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**கிறீஸ்துராஜபுரம் :**

கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04651 - 294785.

**நாகர்கோவில் :**

இராமன்புதூர்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**தூத்துக்குடி :**

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**

No-7, ஜவஹர் தெரு, 15-வது குருக்குச்சாலை,
குமரன் நகர், திருச்சி - 17
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை :**

அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்,
சின்ன மலை, சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.


Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com